முருகப்பெருமான் துணை

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

14.11.2024

1. கந்தா போற்றி கடம்பா போற்றி
கருணை கடலே வேலவா போற்றி
எந்தன் மக்கள் கடைத்தேற வேண்டி
ஏழாம் படை வீட்டில் சோதி வடிவாக

2. ஆகவே எந்தனுள் கலந்தருளுகின்ற
ஆறுமுகா உமை போற்றி அரங்கனும்
வகைபட குரோதி துலை திங்களில்
வரமென சதுர்வார குருவார அருளாசி

3. அருளாசிதனை அன்பர்கட்கு உரைப்பேன்
அரங்கன்யான் அனைத்துமாக இருக்க
மருளளும் மிரளளும் ஏனப்பா
மகத்துவம் கூட்டி உங்களை காப்பேன்

4. காப்பேன் சோடைகளை நீக்கி
கருணைபட தேகமன பலம் கூட்டி
தப்பாமல் தனவளம் பொருள் வளமும்
தக்க ஆள்பலமுமாக வருவேன்

5. வருவேன் வளங்களை கூட்டி
வறுமை ருணரோகம் அகற்றி
தருவேன் ஆரோக்கியம் ஆயுள்பலம்
தனிப்பட்ட சிக்கல்களும் அகற்றி

6. அகற்றி அழைக்கின்ற அக்கணமே
அரங்கன் அனைத்து வடிவாயிருப்பேன்
செகத்தில் என் சீடர் மக்கள் போல்
சீடர் கூட்டம் எங்கும் கண்டிலேனப்பா

7. அப்பனே நீங்கள் எல்லாம் தருமவான்கள்
அடைந்திடா அளவிலா வரமிருக்க
தப்பாமல் ஞானிகள் பூசை பலமுடன்
தருமவழிதனில் விடாமல் தொடர்ந்து வர

8. வருகவே வருங்காலம் வளமாகி
வல்லமையான என் துணை கூடிட
தருமவானாய் கலியினில் தேறியே
தனவானாய் ஞானவானாய் மாறி

9. மாறியே மாயைகளை வெல்வர்
மகான்கள் பலரும் வியந்தருள
தேறுவர் ஞானிகள் ஆகவே
தேசிகன் என் தொண்டர் எனும் பெருமைபட

10. பெருமைபட கலியிடர் கடந்து
பிறவா பேறு கண்டிட
முருகப் பெருமானே வந்தருள
முழுமைதனை யாவரும் அடைவர்

11. அடையவே அரங்கனென் தருமத்தில்
அவரவரும் பங்களிப்பு குறையா
தடையற பொருளுதவி செய்து
தவவாழ்வை தொடர்ந்துவர வேணுமப்பா
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–